OS . 49/2021

வா.சா. 3 . திரு. ஜெயந்த் த/பெ. சின்னப்பா

நாள்: 22.04.2026

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திடமிருந்து அழைப்பாணை வந்தது. இந்த வழக்கின் வாதி மற்றும் பிரதிவாதிகளை தெரியுமா என்றால் தெரியும், உறவினர்கள். வாதி பாலமுருகன் எனக்கு மாமா ஆவார். பிரதிவாதியும் எனக்கு மாமா ஆவார். வாதி தாக்கல் செய்த வழக்கு பற்றி விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 ல் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். நான் சாட்சி கையொப்பம் செய்யும்போது அங்கு யார் யார் இருந்தார்கள் என்றால் பிரதிவாதிகள் சரளா, ரேகா மற்றும் புகழேந்தி மற்றும் வாதி பாலமுருகன் , வாதியின் தாயார் தேவி ஆகியோர் இருந்தார்கள். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் உள்ள விவரங்களை நான் கையொப்பம் இடும்போது படித்துக்காண்பித்தார்கள். அந்த ஆவணத்தில் உள்ள தொகை விவரம் சொல்லமுடியுமா என்றால் தொகை விவரம் குறித்து எனக்குதெரியாது.

2. நான் கையொப்பம் செய்யும்போது டைப் செய்யப்பட்டிருந்ததா என்றால் டைப் செய்யப்பட்டிருந்ததில்தான் நான் கையொப்பம் செய்தேன். அந்த ஆவணத்தை யார் தயார் செய்தது என்றால் சுந்தரமூர்த்தி தயார் செய்தார். அவர் அந்த இடத்தில் இருந்தாரா என்றால் அவர் அங்குதான் இருந்தார். தேவி மற்றும் பிரதிவாதிகள் கையொப்பம் போட்டபிறகுதான் நான் கையொப்பம் செய்தேன். பத்திரம் எங்கு டைப் செய்யப்பட்டது என்றால் பத்திரம் தயார் செய்தவர் பத்திரத்தை டைப்செய்து எடுத்துவந்தார். எனக்கு இந்த வழக்கு விவரங்கள் எனக்கு தெரியாது என்றாலும், வாதி உறவினர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதன்பேரில் சாட்சி கையொப்பம் செய்துவிட்டு அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கிடையே உள்ள வழக்கு விவரங்கள் தெரியாமல் உறவினர் என்ற அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன் என்றால் சரியல்ல.